பக்கங்கள் 16+ 03

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 22 சனிக்கிழமை 06.09.2025 | அதிர்வு 38

## சுற்றுலா விடுதி அறையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!



(க.கிஷாந்தன்)

ஹட்டன், கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உள்ள சுற்றுலா விடுதி 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# துப்பாக்கிச்சூடுகளால் அதிரும் தென்னிலங்கை

## அடுத்தடுத்து 4 இடங்களில் வேட்டு

தென்னிலங்கையில் நேற்று நள்ளிரவும் இன்று அதிகாலையும் நான்கு இடங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் - மஹாவத்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நேற்று நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள், ரிவோல்வர் துப்பாக்கியால் ஒருவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 03

# ஒரு புறம் கொலை! மறுபுறம் மிரட்டல்!!

## அரசைக் கடுமையாகச் சாடுகின்றார் சஜித்



“நாடு முழுவதும் துப்பாக்கிச்சூடு மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொலை செய்யும் கலாசாரம் தொடர்ந்தும் வியாபித்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், அரசை நேர்மறையாக விமர்சிக்கும் தரப்பினரைக் கூட அச்சுறுத்தும் திட்டம் ஒன்று சூட்சுமமாக முன்னெடுக்கப்பட்டு 03



# தேரேறி வந்தான் சந்நிதியான்! கடலெனக் குவிந்த பக்தர்கள்!!

கடலெனக் குவிந்த பக்தர்களின் அரோகரா கோஷம் விண்ணதிர முழுங்க, வரலாற்றுச் சிறப்பு மிக்க "அன்னதானக் கந்தன்" எனச் சிறப்பிக்கப்படும் யாழ். வடமராட்சி, செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று இடம்பெற்றது.

(படங்கள்:- ஜி.எல்.தர்ஷன்)











# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி பாடசாலை மாணவன் ஒருவர் மரணம்

விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு நீராடச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது என்று தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

நுகவெல பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

இவர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து விக்டோரியா நீர்த்தேக்கத்துக்குச் சென்றுள்ள நிலையில் மாணவர்களுடன் நீராடிக்கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## சுற்றுலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றின் அறையில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ரியான்சி பிள்ளை என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் சுற்றுலா இடங்களைக் கண்டு களிக்க வந்துள்ளார். இதன்போது, நேற்று மதியம் தனது நண்பருடன் குறித்த சுற்றுலா விடுதியில் தனது நண்பருடன் மது அருந்திவிட்டு விடுதியில் கீழே வீழ்ந்து கிடந்துள்ளார்.

பின்னர், கீழே விழுந்த நபரை மீண்டும் அறைக்குக் கூட்டிச் சென்றுள்ளனர். எனினும், இன்று காலை மேற்படி நபர் வெளியில் வரவில்லை என்பதால், விடுதி ஊழியர் ஒருவர் இது குறித்து திம்புள்ள பத்தனைப் பொலிஸாருக்கு அறிவித்தனர். பின்னர் பொலிஸார் மேற்படி விடுதிக்கு வந்து அந்த நபர் அறைக்குள் உயிரிழந்து கிடந்தமையைக் கண்டனர்.

உயிரிழந்தவரின் உடல் தொடர்பான நீதிவான் விசாரணை நடைபெற்றது.

சடலம் ஹட்டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதனையடுத்துப் பொலிஸார் சடலத்தை டிக்கோயா ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பிரேத பரிசோதனைகளின் பின் மேலதிக விசாரணைகள் இடம்பெறும் என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த களனியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர், கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்த வீதியில் அமைந்துள்ள வங்கியொன்றுக்கு முன்பாக, இரண்டு ஆயுததாரிகள் ஒருவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்திய சாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, கம்பஹா, நீர்கொழும்பு, குட்டுதுவ பகுதியில் இன்று அதிகாலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு, குட்டுதுவ பகுதியில் உள்ள வீடொன்றின் மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டின் போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் வீட்டின் ஜன்னல் மட்டும் சேதமடைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க, களுத்துறை, பாணந்துறை, அலுபோமுல்ல பகுதியில் இன்று அதிகாலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை, அலுபோமுல்ல பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றின் மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டின் போது விற்பனை நிலையத்தில் பெண் ஒருவர் இருந்துள்ள நிலையில் எந்தவித காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

என். 99 ரக பிஸ்டலால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டின் போது விற்பனை நிலையத்துக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி நான்கு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒரு புறம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது. பை தக்சலாவா என்ற யூடியூப் சேனலை நடத்தும் இராஜ் வீரரத்ன மற்றும் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளுக்கு அருகில் இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில் பல்வேறு நபர்கள் வந்த சம்பவம் இதற்குக் கிட்டிய சம்பவமாகக் காணப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில், சிவில் குடிமக்கள், ஊடகத்துறையில் உள்ளவர்கள் மற்றும் சமூக ஊடக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் பாதுகாப்பின்மை உணர்வு நிலவுகின்றது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று ஊடகங்களுக்கு விசேட கூற்றை முன்வைத்து தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "தற்போதைய ஆளும் தரப்பினர் கடந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது மேசைகள் மற்றும் நாற்காலிகளைக் கொண்டு வாருங்கள், தேசிய பாதுகாப்பு குறித்த டியூசன் வகுப்புகளை எடுக்கின்றோம் எனப் பிரஸ்தாபித்திருந்தனர். அப்போது அவ்வாறு சொன்ன இந்த அரசியல் கட்சி நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்தக் கொலைக் கலாசாரம் நகரம் நகரமாக வியாபித்து வருகின்றன. சமூக ஊடக ஆர்வலர்களுக்கு எதிரான இத்தகைய அச்சுறுத்தல்கள், நாட்டின் அரசமைப்பின் உச்ச சட்டமான மனித வாழ்வுரிமையை மீறும் செயலாக அமைந்து காணப்படுகின்றது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான இந்த அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்தின் மீது விழுந்த பெரும் அடியாகும். இதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இராஜ் வீரரத்ன மற்றும் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளுக்கு அருகில் வருகை தந்த, இந்த அடையாளம் தெரியாத சைக்கிள் ஓட்டுநர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அரசு செய்யும் நல்ல விடயங்களைப் பாராட்டவும், தவறான விடயங்களை விமர்சிக்கவும் சகல குடிமக்களுக்கும் உரிமை காணப்படுகின்றது. அரசின் நடவடிக்கைகளில் எது சரி எது தவறு என்பதைச் சுட்டிக்காட்டுவது 220 இலட்சம் மக்களினதும் பொறுப்பாகும். இந்த உரிமை மக்களுக்குச் சொந்தமான உரிமையானபடியால், அரசுக்கோ அல்லது குண்டர்களுக்கோ இதனைப் பறிக்க முடியாது.

சமூகத்தை அச்சுறுத்தி வரும் இந்தக் கொலைக் கலாச்சாரத்தை முறியடிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக எங்களால் பெற்றுத் தர முடியுமான அதிகபட்ச பக்க பலத்தை பெற்றுத் தருவோம்.

அரசால் செவிமெடுக்க முடியாத விடயங்கள் யூடியூப் அலைவரிசைகளில் செல்லப்படும் போது, அவ்வாறு விடயங்களை முன்வைப்பவர்களை அச்சுறுத்துவதற்குப் பதிலாக, அரசின் தவறுகளைச் சரி செய்து கொண்டு, நாட்டை முன்னோக்கி நகர்த்தும் பணியையே முன்னெடுக்க வேண்டும்.

சமூக ஊடகங்களிலும் சுதந்திர ஊடகங்களிலும் உண்மையைப் பேசும் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னிற்கும்."

– என்றார்.




# மன்னாரில் 36 ஆவது நாளாக இன்றும் தொடரும் போராட்டம்!

## இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள் ஆதரவு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனவீர்ப்பு போராட்டம் இன்று சனிக்கிழமை (06) 36 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தப் போராட்டத்தை இளைஞர் மற்றும் மன்னார் மக்கள் இணைந்து முன்னெடுத்து வருகின்ற நிலையில் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "காற்றாலை எம் கண்ணீரின் கதை சொல்லும்", "நாட்டை விற்று அபிவிருத்தி எதற்கு", "அரசே எமது உயிரோடு விளையாடதே", "காற்றாலை அமைத்து எமது குலக ருவறுக்காதே", "சொந்த மண்ணில் அகதியாகும் நிலை வேண்டாம்" போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து மன்னார் பிரதான சுற்று வட்ட பகுதியில் இருந்து மன்னார் மாவட்ட செயலகம்வரை பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக சென்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.









# எரிபொருள் பவுசர் - ஓட்டோ விபத்து; தாயும், குழந்தையும் காயம்!

(க.கிஷாந்தன்)

கொழும்பு கொலன்னாவையிலிருந்து கொட்டகலை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் சேமிப்பு வளாகத்துக்கு எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசர் ஒன்று ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணித்த ஒரு சிறு குழந்தையும், தாயும் காயமடைந்துள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (05) ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியில் செனன் தோட்டப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசர் வாகனத்தை, ஓட்டோ முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து நடந்த நேரத்தில், ஒரு சிறு குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பயணித்துள்ளனர். விபத்தில் ஒரு சிறு குழந்தையும், தாயும் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



# மன்னாரில் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் சகோதரர் இருவருக்கு 7 வருட கடூழிய சிறை!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் 16 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளையைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

குற்றத்தின் பாரதூர தன்மை, பாதிக்கப்பட்ட சிறுமியின் நிலை, மேலும் இவ்வாறான குற்றங்கள் இடம்பெறாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை எடுக்கப்பட்ட இந்த வழக்கில் 7 வருட கடூழிய சிறைத் தண்டனைக்கு மேலதிகமாகத் தண்டப்பணமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா நஷ்ட ஈட்டு தொகையும் வழங்க தீர்ப்பளிக்கப்பட்டது.

இதில் சகோதரர் குறித்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய உதவி ஒத்தாசை புரிந்தமைக்காக இரண்டாம் எதிரிக்கு 7 ஆண்டு கடூழிய சிறை விதிக்கப்பட்டது.

வழக்கு தொடுனர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் மற்றும் சிவஸ்கந்தஸ்ரீ ஆகியோர் வழக்கை நெறிப்படுத்தி இருந்தனர்.

வழக்கு தொடுநர் தரப்பில் வழக்கு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதால் குற்றவாளிகளுக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பாதாள உலகப் பயங்கரம்

தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக சித்திரித்து, அதற்கு எதிராக அரச பயங்கரவாதத்தை மோசமாகக் கட்டவிழ்த்துவிட்டு, யுத்தக் குற்றங்களைப் புரிந்து, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்து, மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு, அந்தப் போராட்டத்தை அழித்தொழித்த பௌத்த - சிங்கள பேரினவாத அரசுகளால், தென்னிலங்கையில் கட்டவிழும் பாதாள உலகக் கோஷ்டிகளை அடக்க முடியாமல் இருப்பது வியப்புக்குரியதுதான்.

தீவிரமடைந்து வரும் பாதாள உலகக் கும்பல்கள், போதை வஸ்துக் கடத்தலிலும், அந்த வர்த்தகத்திலும் வன்முறை அராஜகத்திலும் கொடி கட்டிப் பறக்கின்றன.

இத்தகைய போதை வஸ்து வர்த்தக கும்பல்களின் - பாதாள உலகக் குழுக்களின் - கோரமுகம் பற்றிய புதிய அதிர்ச்சி தகவல் இப்போது வெளியாகி இருக்கின்றது.

மிக மோசமான உடலியல் தீங்குகளை ஏற்படுத்தக்கூடிய ஐஸ், ஹஷ்கிஸ், ஹெரோயின் போன்றவை வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்பட்டு உள்நாட்டில் விநியோகிக்கப்படுகின்றன என்றுதான் இவ்வளவு காலமும் எண்ணப்பட்டு வந்தது.

ஆனால் உடலுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மெதப்பொட்டமைன் எனப்படும் ஐஸ் பளிங்குகள் உள்நாட்டிலேயே பெரும் எடுப்பில் உற்பத்தி செய்யப்படும் நிலைமை நாட்டில் இருக்கின்றது என்ற அதிர்ச்சித் தகவல் இப்போது வெளியாகி இருக்கின்றது.

200 கோடி ரூபா பெறுமதியான சுமார் 200 கிலோ ஐஸ் போதை பொருளைத் தயார் செய்யக்கூடிய அளவுக்கு தேவையான சுமார் ஐம்பதாயிரம் கிலோ இரசாயனப் பொருள்கள் தலாவ, மித்தெனிய பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

போதைப் பொருள் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறக்கும் பாதாள உலகக் குழு தலைவர் ஒருவரினால் இந்த இரசாயனங்கள் இரண்டு கொள்கலன் மூலம் நாட்டுக்குள் கடத்திக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

ஈரான் அல்லது பாகிஸ்தானில் இருந்து இந்தக் கொள்கலன்கள் இலங்கைத் துறைமுகங்கள் ஊடாக நாட்டுக்குள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசின் நிர்வாகத்தின் கீழ் 300-க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் ஒரே தடவையில் உரிய சுங்கப் பரிசோதனை இன்றி விடுவிக்கப்பட்ட பின்புலத்தில் இந்த விடயத்தையும் அவதானிக்க வேண்டிய - கவனிக்க வேண்டிய - சூழல் ஏற்பட்டு இருப்பதையும் மறுக்க முடியாது.

இலங்கை வெளிநாட்டில் இருந்து போதைப் பொருள்களைத் தருவித்துப் பயன்படுத்தும் அல்லது பிற நாடுகளுக்கு அனுப்பும் மையம் என்பதற்கு அப்பால் போதைப் பொருள் உற்பத்தி இடமாகவும் மாறி இருக்கின்றது என்பது பெரும் அதிர்ச்சி தரும் தகவலாகும்.

போதைப் பொருள் வர்த்தகத்தின் மையமாக இருக்கும் தென்னிலங்கையில் அதற்கு எதிராக ஒரு போர்ப் பிரகடனத்தை செய்து, அதை அடக்கும் நடவடிக்கையை தீவிரமாக எடுப்பதை விடுத்துத் தன்னுடைய படைப் பலத்தை - ஆளணியை - இராணுவம் உட்பட முப்படைகளை - தமிழர் தாயகத்தில் குவித்து, அதை ஆக்கிரமித்து நிற்கின்றது தென்னிலங்கை ஆட்சிப் பீடம்.

நாட்டைச் சீரழிக்கும் பாதாள உலகக் கட்டமைப்பை அழிப்பதை விட, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அடக்குமுறைக்குள் ஒடுக்கி வைத்திருப்பதுதான் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் முக்கிய நோக்காக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் ஒரு போக்கு இது.



# டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில்

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் மாவட்டசெயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய மேலதிக அரச அதிபர் க. சிவகரன்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாடு ஓரளவு சீரக உள்ளது. தொடர்ச்சியான கட்டுப்பாட்டுக் கண்காணிப்பு அவசியம். அனைவரதும் ஒத்துழைப்பும் தேவை என்று தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் வி. பி. எஸ். டி. பத்திரன மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தக் கூட்டத்தில் முன்னெச்சரிக்கையாக டெங்குக் நோய் வராமல் தடுப்பதற்கு உரிய வழிவகைகள் ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. எதிர்வரும் 08 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிக்கு இடையில் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச டெங்குக் கட்டுப்பாட்டுக் கூட்டத்தையும், கிராம அலுவலர் தலைமையில் கிராம மட்ட டெங்கு நோய் கட்டுப்பாட்டு கூட்டத்தையும் நடத்துதல்.

2. டெங்கு விழிப்புணர்வு வாரத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடத்துதல். அந்த வகையில் 14 ஆம் திகதி வணக்கஸ் தலங்களிலும், 15 ஆம் திகதி அரச அலுவலகங்களிலும், 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் பாடசாலைகளிலும் சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஒருங்கிணைப்பில் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. விசேட நுளம்பு கட்டுப்பாட்டு தினங்களான எதிர்வரும் 22 ஆம் திகதி





தொடக்கம் 24 ஆம் திகதிகளில் – சுத்திகரிப்பு சிரமதான வேலைகளை வீடுகள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் மேற்கொள்ளுதல்.

இலங்கையில் மலேரியா நோய் கட்டுப்பாட்டில் உள்ளது. எனினும் குறிப்பாக தென் ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருகின்றவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருப்பது தொடர்பில் விழிப்புணர்வு அவசியம் என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

4. திண்மக் கழிவகற்றலில் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவதை உறுதிப்படுத்தல்.

கலந்துரையாடலில் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பொலிஸ் கடற்படை மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு வீடமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர்!

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் ரி.பீ சரத் வருகை தந்திருந்த நிலையில் பிரதேச செயலகத்தில் பொதுமக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டார்.

கலந்துரையாடலில் பளை நகரம், புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, இத்தாவில், கச்சார்வெளி, அரசர்கேணி, முகமாலை, வேம்பொடுகேணி, கிளாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த பகுதியான கொடுப்பனவு வழங்கப்பட்டு மிகுதிக் கொடுப்பனவு வழங்கப்படாது இடைநிறுத்தப்பட்ட வீட்டுத்திட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர்.

இவர்கள் தாம் கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வீட்டுத் திட்ட வசதியின்றி மிகவும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர் என்று இதன் போது தெரிவித்தனர்.

இந்த வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாது பொருளாதாரக் கஷ்டத்தில் வாழ்கின்றனர் என்றும் இந்த வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

மக்களின் பிரச்சினைகளைத் தான் அறிந்து கொண்டார் என்றும் இந்தத் திட்டத்தை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# கோண்டாவிலில் நாளை தீ மிதிப்பு!

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோவிலில் (காளி கோவில்) நாளை ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெறவுள்ள தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றுவரம் மஹோற்சவத்தின் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள தீர்த்த உற்சவத்திலேயே இந்த தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு வசந்த மண்டப பூசையை தொடர்ந்து, 10 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த கோவிலில் தீ மிதிப்பு நிகழ்வு பன்னெடுங் காலமாக நடைபெற்று வருகின்றது. ஊர் மற்றும் அயல் கிராமங்களில் வாழ்ந்து வரும் அடியவர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக கோவிலுக்கு திரண்டு வந்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

தீர்த்தோற்சவத்தின் மறுநாள் இரவு கோவிலில் நடைபெறவுள்ள பூங்காவன நிகழ்வில் விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் பாடகர்கள் பங்கேற்கும் ‘சாய்சபி’ இசைக்குழுவினரின் இசைச் சங்கம நிகழ்வும் நடைபெறவுள்ளது.





# பளை - வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை அதிபருக்கு மணிவிழா!

பளை – வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்று சென்ற வடிவேலு ஜீவரத்தினத்தின் மணி விழா நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை பணியாளர் நலன்பேணல் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ. த. ஜெய சீலன், கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் உட்பல பல பிரமுகர்கள் விருந் தினர்களாகக் கலந்து கொண்டனர்.







# மாதாத்தில் ஒரு நாள் செயிரி திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை!

அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட செயிரி வார நிகழ்ச்சித் திட்டத்தை மாதாந்தம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்பிலும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடப்பரப்பை பயனுள் ளதும் வினைத் திறனானதுமான முறை யில் பயன்படுத்துவதற்கும் அலுவலர் களுக்கு அமைதியான மற்றும் சுதந்திர மான வேலைச் சூழலை உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படையிலான ஒரு நடவடிக்கையாக ஒவ்வொரு அரச நிறு வனத்திலும் குவிந்துள்ள தேவையற்ற பொருள்களை அகற்றுவதற்காகவும் 2025 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 4 ஆம் திகதி வரையிலான நாள்கள் செயிரி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்தில் அரச அலு வலகம் மற்றும் வளாகங்கள் அந்தந்த அலுவலக அலுவலர்கள் மற்றும் பணி யாளர்களால் துப்பரவு செய்யப்பட்டன.

இந்த வேளையில் நீண்டகாலம் துப்பு ரவு செய்யப்படாத நிலையில் வளாகம் மற்றும் அலுவலக மேசை அலமாரி போன்றவற்றில் பாம்பு உட்பட விஷ ஜந் துகள் உயிருடனும் இறந்த நிலையிலும் காணப்பட்டுள்ளன.

பொது மக்கள் தமது தேவைக்காக சேவை பெற வந்திருந்த வேளையில் அலுவலரின் மேசை மற்றும் அலமாரிகள் மற்றும் வளாகத்தில் பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துகள் காணப்பட்டதால் அச்சப் பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதனால் ஒவ்வொரு அலுவலகத்தி லும் மாதத்தில் ஒரு நாள் செயிரி நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுள்ளனர்.

நாடு முழுவதும் செயிரி நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக் கது.

# மரண அறிவித்தல்



தோற்றம்

30 - 04 - 1931

மறைவு

05 - 09 - 2025

## திருமதி சிவசுப்பிரமணியம் சண்முகரத்தினம் அம்மா

யாழ்.கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கனடா Markham த்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சண்முகரத்தினம் அம்மா அவர்கள் 05.09.2025 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - மாணிக்கவல்லி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு - சுந்தரவல்லி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், சரஸ்வதி மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், இராமச்சந்திரன் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆயுள்வேத வைத்தியர் (நாவற்குழி) காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் துணைவியாரும் ஸ்ரீதரன், ஸ்ரீபவன், கலாஸ்ரீ, ஸ்ரீபதி, ஸ்ரீரதி, ஸ்ரீராதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கீதரஞ்சனி, சிவாஜினி, தங்கரட்ணராஜா, பத்மசோதி, தயாநிதி, குமரேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சீவன், வாஷோ (இலண்டன்), சஞ்சுதா, றபஏல் (ஜேர்மனி), ஜெனனி, சஜீவ் (கனடா), யஸ்வினி,விஷ்ணு (கனடா), நிசோக், தாணியா (கனடா), மதினேஷ் (கனடா), காயத்திரி, கார்த்திக் (கனடா), மயூரி, தட்ஜெனன் (கனடா), வைஷ்ணவி (கனடா), அஷ்விந் (கனடா), அருண் (அமெரிக்கா), அர்ச்சனா(கனடா), நிர்ஷன் (கனடா), திவ்யா, சித்தார்த்தன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் வையந்தி, வினையன் (ஜேர்மனி), இசான், ஆதவ், ஆதித்தியா, ஆரியா (கனடா), ஆரியன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**Visitation:**

Chapel Ridge funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON - L3R 5G1

On Tuesday, 9th September 2925 from 05:00 pm to :09:00 pm & On Wednesday, 10th September 2025 from 08:00 am to 09:00 am

**Service:**

Chapel Ridge Funeral Home

On Wednesday, 10th September 2025 from 9 am to 11:00 am

Followed by cremation 11:30 am at 2 Stalwart Industrial Drive, Gormley, ON - L0H 1G0

**தொடர்புகளுக்கு:**

ஸ்ரீதரன் - +16478088156

ஸ்ரீபவன் - +1905-2060970

ஸ்ரீபதி - +1 416-9023542

கலாஸ்ரீ - +491577 89 62915

ஸ்ரீரதி - +1 905201 9437 or Cell+1 416565 9468

தகவல்:

**குடும்பத்தினர்.**





# தந்தை செல்வாவின் 127ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தென்கிழக்குப் பல்கலையில் கலந்தாய்வு

(பாறுக் ஷிஹான்)

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் "தந்தை செல்வா" என மதிப்புடன் அழைக்கப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 127ஆவது பிறந்த நாளையும், 41 ஆவது நினைவு நாளையும் முன்னிட்டு, தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாச்சார பீட அரசியல் விஞ்ஞானத் துறை மற்றும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை இணைந்து நடத்திய சிறப்பு நினைவு தின சொற்பொழிவு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில், செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதான அறங்காவலர் எஸ்.சி.சி. இளங்கோவன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தந்தை செல்வாவின் வாழ்க்கைத் தத்துவங்களையும் கொள்கைகளையும் இளைஞர் தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் இவ்வாறு நிகழ்வு நடத்துவதில் பெருமை கொண்டதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் அறிமுக உரையை வழங்கி, மாணவர்களுக்கு தந்தை செல்வாவின் அரசியல் பாரம்பரியத்தை விளக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பிரதான உரையை உபவேந்தர் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைதீன் நிகழ்த்தினார்.

முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலாநிதி எம். அப்துல் ஜப்பார் , பேராசிரியர் தணபாலசிங்கம்



கிருஷ்ணமோகன், பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஏ.எம். றமீஸ் அப்துல்லாஹ் , பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் கிருஷ்ணமோகன் , சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், பீடாதிபதி பேராசிரியர் பாஸில் ஆகியோரது உரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வின் முக்கிய நோக்கமாகத் தந்தை செல்வாவின் நினைவுகளை போற்றுவது, அவரது வாழ்க்கை பாடங்களை மாணவர்களுக்கு எடுத்துரைப்பது, சமூக ஒற்றுமை மற்றும் மொழி உரிமைக்கான விழிப்புணர்வை அதிகரிப்பது போன்றன இருந்தன.

இந்த நினைவு தின நிகழ்வு, தந்தை செல்வாவின் அரசியல் தத்துவம் மற்றும் பாரம்பரியத்தை இன்றைய தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் அமைந்தது.





















# கம்பன் கழகத்தின் “நிருத்தோற்சவம்” மூன்று நாள்களாகக் கொழும்பில்

அகில இலங்கை கம்பன் கழகத்தின் “நிருத்தோற்சவம்” - 2025 கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் மூன்று நாள்கள் இடம்பெற்றது.

இறுதி நாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாலை பெரும் தலைவர் ஜெ. விஸ்வநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் ரவி ஜுவலரி அதிபர் ஆர். மகேஸ்வரன் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

நாட்டிய கலைமணி பவானி குகப் பிரியாவின் மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. பெரும்தலைவருடன், திருமதி தாரணி ராஜ்குமார், திருமதி யமுனா கணேசலிங்கம் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.











# வவுனியா வடக்கு பிரதேச சபையின் நடமாடும் சேவை கனகராயன்குளத்தில்

வவுனியா வடக்கு பிரதேச சபையால் கனகராயன்குளம் மற்றும் மன்னகுளம் வட்டாரத்தில் “மக்களுடன் மக்களுக்காக நாம்” என்னும் தொனிப்பொருளில் நடமாடும் சேவை ஒன்று கனகராயன்குளம் பிரதேச சபை உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையானது வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணவேணி திருநாவுக்கரசு தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்போது உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர், பொலிஸ்உத்தியோகத்தர்கள், ஆயுள்வேத வைத்தியர், பிரதேச சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பங்குபற்றினர்.



இதன் போது ஆயுள்வேத மருத்துவ சேவை, வியாபார அனுமதி மற்றும் வியாபார வரி தொடர்பான சேவை, கட்டட அனுமதி தொடர்பான சேவைகள், எல்லைக்கோட்டு சான்றிதழ் தொடர்பான ஆலோசனை மற்றும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல், கழிவகற்றல் சேவை, விளம்பரப் பலகை கட்டணம் செலுத்துதல், காணி அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள் (பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டது), நூலக அங்கத்துவம் தொடர்பான சேவைகள், வீதி விளக்குக் கோரிக்கைகள் பெற்றுக்கொள்ளல், பொது மக்கள் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல், 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல், பொலிஸ் உத்தியோகத்தருடனான சந்திப்பு, கமநலசேவைகள் தொடர்பான சந்திப்பு ஆகிய சேவைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது வட்டாரத்துக்கு உட்பட்ட மக்கள் பலரும் பங்குபற்றி பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க அரசின் வரி விதிப்பைக் கண்டித்து தமிழகத்தில் இடதுசாரி கட்சிகள் ஆர்ப்பாட்டம்




அமெரிக்க அரசின் வரி விதிப்பை கண்டித்து தமிழகம் முழுவதும் இடதுசாரி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருள்களுக்கான 50 சதவீத வரி விதிப்பை கண்டித்தும், இந்தியாவின் சுயசார்பு, ஏற்றுமதி தொழில்கள், தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை பாதுகாக்க வலியுறுத்தியும் இடதுசாரி கட்சிகள் சார்பில் சென்னை, காஞ்சிபுரம், கோவை, திருப்பூர் உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னையில் நடந்த போராட்டத்துக்கு சி.பி.ஐ. மாநில செயலாளர் இரா. முத்தரசன், சி.பி.எம். மாநில செயலாளர் பெ.சண்முகம், சிபிஎம்எல் மாநில செயலாளர் பழ.ஆசைத்தம்பி ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆர்ப்பாட்டம் குறித்து செய்தியாளர்களிடம்இரா.முத்தரசன்கருத்துதெரிவிக்கையில்,

“அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் பிரதமர் மோடி இருவரும் ஒருவருக்கொருவர் மாறிமாறி தேர்தல் பிரச்சாரம் செய்தனர். ஆனால் இவர்களது நட்பு இந்தியாவுக்கு பலனளிக்கவில்லை. ஒரு சுயச்சார்புள்ள நாடு மற்றொரு நாட்டோடு உறவு வைத்துக்கொள்வது அந்நாட்டின் இறையான்மை.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி, தான் சொல்கிற நாடுகளிடம் மட்டும்தான் வர்த்தகம் செய்ய வேண்டுமென்று சட்டாம்பிள்ளைத்தனமாக கூறுகிறார். அமெரிக்காவிடம் இந்தியா சரணாகதி அடையாமல், இடதுசாரிகள் உள்ளிட்ட பிற கட்சிகளோடு கலந்து பேசி மாற்றுக் கொள்கையை உருவாக்கி இந்திய தொழில்களை, தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும்.” என்றார்.

பெ.சண்முகம் கருத்து தெரிவிக்கையில்,

“ட் ரம்ப் என்ற தனி நபரின் விருப்பு வெறுப்பால் விதிக்கப்பட்டுள்ள வரியால் பல நாடுகளில் உள்ள லட்சக்கணக்கான முதலாளிகள், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியா முழுவதும் ஏராளமான வேலையிழப்பு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் திருப்பூர் ஆடை உற்பத்தி நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது.

ராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில் தோல் தொழில் முடங்கும் நிலை உள்ளது. ஆண்டுக்கு 1000 கோடி ரூபாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரி தொழிலில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றை சரி செய்ய அவசர உணர்வுடன் ஆக்கப்பூர்வமாக மத்திய அரசு செயல்பட வேண்டும்.” என்றார்.

# ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் தொடர்ந்து கொள்வனவு செய்யப்படும்

## நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு



ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது தொடரும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

இது தேசிய நலன் சார்ந்த முடிவு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மீதான வரி விதிப்பு கொள்கையை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஜூலை மாத இறுதியில் அறிவித்தார். ரஷ்யாவில் இருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதியை நிறுத்த வேண்டும் என அவர் பகிரங்கமாக அறிவித்தார். அது தொடர்ந்த நிலையில் 25 சதவீத பரஸ்பர வரி மற்றும் கூடுதலாக 25 சதவீதம் என இந்தியாவுக்கு மொத்தம் 50 சதவீதம் வரி விதித்துள்ளது அமெரிக்கா. தற்போது இது நடைமுறையில் உள்ளது. இது உலக அளவில் பேசுபொருளாகி உள்ளது.

இந்நிலையில், தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவிக்கையில்,

“நமது தேவைக்கு எது சரி என்பதை பார்த்து பல்வேறு பொருட்களை வாங்கி வருகிறோம். இதன் அடிப்படையில்தான் ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல பொருட்களை வாங்குகிறோம். இதில் விலை உள்ளிட்ட விவரங்களும் கவனிக்கப்படும்.

கச்சா எண்ணெய் அந்நியச் செலவாணி சார்ந்துள்ள ஒரு பொருள். அதனால் அதில் நமக்கு பொருத்தமானதை வாங்குகிறோம். அந்த வகையில் பார்த்தால் ரஷ்யாவிடம் இருந்து நாம் கச்சா எண்ணெய் வாங்குவது தொடரும். அதில் சந்தேகம் எதுவும் இல்லை. இந்தியாவின் இறக்குமதி செலவில் கச்சா எண்ணெயின் பங்கு மிக அதிகம்.” என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்துவதில் தோல்வி; உண்மையை ஒப்புக்கொண்ட டொனால்ட் ட்ரம்ப்



ரஷ்யா – உக்ரைன் இடையேயான போரை நிறுத்தத் தவறியதை ஒப்புக்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இது தனது நிர்வாகத்தின் போது எதிர்கொண்ட மிகவும் கடினமான மோதல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளை மாளிகையில் புதுப்பிக்கப்பட்ட ரோஸ் கார்டனில் நடைபெற்ற இரவு விருந்தில் பேசிய ட்ரம்ப்,

"ஏழு மாதங்களில் நாங்கள் செய்ததை யாரும் செய்யவில்லை. ஏழு போர்களை நாங்கள் நிறுத்தினோம். ஆனால், எளிதானதாக இருக்கும் என்று நான் நினைத்த ரஷ்யா மற்றும் உக்ரைன் போர் மிகவும் கடினமானது. ரஷ்ய ஜனாதிபதி புடினுடனான உறவு காரணமாக அந்த போரை நிறுத்துவது எளிதானதாக இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால், அது மிகவும் கடினமானதாக முடிந்தது.

ஒரு போர் 31 ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்தது, அது தடுக்க முடியாதது என்று கூறப்பட்டது. நான் அதை சுமார் 2 மணி நேரத்தில் செய்து முடித்தேன். இன்னொன்று 35 ஆண்டுகளாகவும், இன்னொன்று 37 ஆண்டுகளாகவும் நடந்தது. அவற்றையும் முடித்து வைத்தேன்.

நான் சில போர்களை முடித்து வைப்பதற்கு முன்பு, சிலர் அதனை உங்களால் அவற்றைத் தீர்த்து வைக்க முடியாது என்று சொன்னார்கள். நான் அவற்றைத் தீர்த்து வைத்தேன். உக்ரைன் – ரஷ்யா போரும் மிகவும் கடினமாக மாறியுள்ளது, ஆனால் நாங்கள் அதைச் சரிசெய்வோம், நாங்கள் அதைத் தீர்த்து வைப்போம்." என்று தெரிவித்தார்.

# காசாவை முழுமையாக கைப்பற்றும் நோக்கில் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தும் இஸ்ரேல்











காசாவை முழுமையாக கைப்பற்றும் தாக்குதல்களைத் தொடர்ந்தும் இஸ்ரேல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், 2023 ஒக்டோபரில் நடந்த எல்லை தாண்டிய தாக்குதலின் போது, இரண்டு இஸ்ரேலிய பணயக் கைதிகளை காட்டும் காணொலியை ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

காணொலியில் காட்டப்படும் பணயக்கைதி ஒருவர், தாம் உட்பட 8 பேர், தொடர்ந்தும் ஹமாஸினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஹமாஸால் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் 48 பணயக்கைதிகளில் இவர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

எனினும் அவர்களில் 20 பேர் உயிருடன் இருக்கின்றனர் என கருதப்படுகிறது.

இந்நிலையில் இந்த காணொலி வெளியானதன் பின்னர், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காணொலியில் காட்டப்பட்ட இரண்டு பணயக்கைதிகளின் பெற்றோருடனும் கலந்துரையாடினார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

சனிக்கிழமை 06/09/2025

## ட்ரம்பின் வரிவிதிப்புக்கு எதிராக 9 அம்சத் திட்டங்கள் அறிவிப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த வரிகள் கனடா பொருளாதாரத்தை C3▸



# கியூபெக்கில் சீரற்ற காலநிலையினால் ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு மின்தடை

கனடாவின் தெற்கு கியூபெக் மாகாணத்தில் பலத்த காற்று மற்றும் மழை பெய்ததால், ஆயிரக்கணக்கான வீடுகள் மின்சாரமின்றி பாதிக்கப்பட்டன.

மாலை 5.30 மணிக்கு சுமார் 70,000 வாடிக்கையாளர்கள் மின்சார வசதியின்றி இருந்தனர் என ஹைட்ரோ கியுபகொ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரவு 10.30 மணிக்குப் பின்னரும் 50,000 இற்கும் மேற்பட்டோர் மின்சார மின்றி இருந்தனர்.

புயலின்போது, 20 வயதிற்குட்பட்ட பெண் ஒருவர் பெரிய மரக்கிளை விழுந்ததில் காயமடைந்தார்.

அவர் உயிருக்கு ஆபத்தில்லாத நிலையில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார் என அவசர மருத்துவப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

# விடுதலை புலிகளுக்காக நிதி திரட்டினார் என்று அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மீது குற்றச்சாட்டு



விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டும் அலுவலகத்தை சோதனை செய்த போது கைப்பற்றப்பட்ட ஆவணத்தில் கனடாவின் தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்ஹரிஆனந்தசங்கரியின்தொலைபேசி எண் காணப்பட்டதாக குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ரோயல் கனடியன் மௌவ்ன்டட் பொலிஸின் தேசிய பாதுகாப்பு திகாரிகள் சந்தேகத்திற்குரிய உலக தமிழ் இயக்க அலுவலகத்தை சோதனை செய்த போதே இந்த தொலைபேசி எண் கண்டுபிடிக்கப்பட்டதாக குளோபல் நியூஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த C3▸




# ஏர் கனடா விமான ஊழியர்கள் ஊதிய சலுகையை நிராகரித்தனர்

ஏர் கனடாவின் விமான ஊழியர்களும் அதன் பிராந்தியப் பிரிவும், விமான நிறுவனத்தின் ஊதிய சலுகையை அங்கீகரிப்பதற்கு எதிராக வாக்களித்துள்ளன.

தொழிற்சங்கம் வெள்ளிக்கிழமை இந்த முடிவை அறிவித்தது.

கனடாவின் மிகப்பெரிய விமான நிறுவனத்தில் உள்ள பல விமான ஊழியர்கள் கடந்த மாதம் எட்டப்பட்ட ஒரு தற்காலிக ஒப்பந்தத்தில் ஊதிய உயர்வுகள் குறித்து அதிருப்தி அடைந்தனர். மேலும் அது அந்த நேரத்தில் ஒரு முடங்கிப்போன வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உதவியது.

5 ஆண்டுகள் அல்லது அதற்கும் குறைவான சேவையைக் கொண்ட ரூஜ் விமானப் பணிப்பெண்கள் மற்றும் பிரதான ஊழியர்களுக்கு 12 சதவீத முதலாண்டு ஊதிய உயர்வையும், ஆறு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு 8 சதவீத உயர்வையும் ஏர் கனடா முன்மொழிந்ததாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.






# 80 சதவீத இந்திய மாணவர்களுக்கு விசா வழங்க மறுத்தது கனடா அரசு






கனடாவில் இந்திய மாணவர்களுக்கு விசா மறுப்பு அதிகரித்துள்ளது.

2025 இல் கனடா சர்வதேச மாணவர்களுக்கு விதிகளை கடுமையாக்கியதன் விளைவாக, இந்திய மாணவர்களின் 80 சதவீத விசா விண்ணப்பங்களை நிராகரித்துள்ளது.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பான IRCC வெளியிட்ட தரவுகளின்படி, மொத்தமாக 62 சதவீத வெளிநாட்டு மாணவர்களின் விசா மறுக்கப்பட்டுள்ளன.

இது கடந்த ஆண்டின் 52 சதவீதம் மற்றும் முந்தைய ஆண்டுகளின் சராசரி 40 சதவீதத்தை விட அதிகமாகும்.

இந்த மாற்றத்தை, கனடா தனது கல்வி மற்றும் குடிவரவு கொள்கைகளை மீளாய்வு செய்யும் முக்கிய அடையாளமாக பார்க்கிறது.

2024 இல் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சர்வதேச மாணவர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர். அவர்களில் 41 சதவீதம் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஆனால், 2025 இல் கனடா 4,37,000 study permits மட்டுமே வழங்க திட்டமிட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 10 சதவீதம் குறைவாகும்.

மாணவர்கள்குறைந்தபட்சம்20,635 கனேடிய டொலர் நிதி ஆதாரத்தை நிரூபிக்க வேண்டும். மேலும், தெளிவான படிப்புதிட்டம் (study plans) மற்றும் பிழையில்லாத ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

Post-Graduation Work Permit பெற பல்கலைக்கழக பட்டதாரிகள் B2 நிலை மொழி தெரிவையும், கல்லூரி பட்டதாரிகள் ட1 நிலையையும் கடந்திருக்க வேண்டும்.

இதனிடையே Student Direct Stream திட்டமும் முடிவுக்கு வந்துள்ளது.

இந்த மாற்றங்கள் மாணவர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் பல சிரமங்களை ஏற்படுத்துகின்றன. மேலும் இந்த புதிய விதிகள் எதிர்காலத்தில் இன்னும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

## விடுதலை புலிகளு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆவணம் பற்றி அமைச்சருக்கு தெரியாது என்றும் அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கனேடிய முன்னணி அமைப்பின் அலுவலகத்தில் இருந்தது எப்படி என்று தெரியவில்லை என ஹரி ஆனந்த சங்கரியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆவணம் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்டதாக இருந்தது. அத்துடன் ஆழிப்பேரலையால் இலங்கையின் சில பகுதிகள் பேரழிவிற்கு உள்ளான மூன்று நாள்களுக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்ப அரசியல் வாதிகளை வற்புறுத்திய ஒரு குழுவில் அவர் இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

ஹரி ஆனந்தசங்கரி அப்போது ஒரு சட்டக் கல்லூரி மாணவராக இருந்தார் என்றும் 'பேரழிவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான இலங்கை மக்களுக்கு மனிதாபிமான நிவாரணத்தை ஆதரிப்பதற்காக இயக்கப்படும் முயற்சிகளை ஒழுங்கமைப்பதிலும் பங்கேற்பதிலும் முன்னணிப் பங்காற்றினார் என்றும் அவரின் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது என குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் மேற்படி ஆவணம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறித்து அமைச்சருக்கு எந்தத் தகவலும் தெரியாது.

இந்த விடயம் குறித்து சட்ட அமுலாக்கல் பிரிவு ஒருபோதும் அமைச்சரை தொடர்பு கொள்ளவில்லை என்றும் அவர் உலகத் தமிழ் இயக்கத்துக்காக ஒருபோதும் பணம் திரட்ட வில்லை என்றும் அவரது அலுவலகம் குறிப்பிட்டதாக குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது.

ஹரி ஆனந்தசங்கரி லிபரல் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் பணம் சேகரிக்கும் திட்டம் குறித்த பயங்கரவாத எதிர்ப்பு விசாரணையின் ஒரு அங்கமாக இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதியன்று இந்த ஆவணம் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஹரி ஏ." என்ற பெயருடன் ஆனந்த சங்கரி அப்போது பயன்படுத்திய தொலைபேசி எண்ணுடன் இந்த ஆவணம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனினும் ஹரி ஆனந்தசங்கரி எந்தத் தவறும் செய்தார் என அந்த ஆவணங்களில் கூறப்பட்டு இருக்கவில்லை.

## ட்ரம்பின் வரிவிதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதித்துள்ள நிலையில், அதற்கு எதிராக பிரதமர் மார்க் கார்னி வெள்ளிக்கிழமை ஒன்பது அம்சத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு ஒன்டாரியோ மாநில மிசிசாகாவில் நடைபெற்ற இருநாள் அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிந்தையதாகும்.

மின்சார வாகன இலக்கு மாற்றம்: 2026க்குள் புதிய கார்கள் மற்றும் லாரிகளில் 20 வீத உமிழ்வற்ற வாகனங்களாக (Zero-Emission) இருக்க வேண்டும் என்ற இலக்கு இனி நடைமுறைக்கு வராது.மின்சார வாகன (EV mandate) கொள்கைக்கு உடனடி மறுபரிசீலனை தொடங்கப்படும்.

**கனடிய பொருள்களை கொள்வனவு செய்யும் கொள்கை:**

அனைத்து அரச நிறுவனங்களின் கொள்முதல் மற்றும் நிதியுதவிகளில் கனடிய பொருள் கொள்வனவு நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான சட்ட, விதிமுறை மாற்றங்கள் அக்டோபர் மாதத்திற்குள் தொடங்கி, 2026 வசந்த காலத்திற்குள் முழுமையாக நடைமுறைக்கு வரும்.

**கடன் வசதிகள்:**

வரிகளால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு கூடுதல் கடன் சலுகைகள் வழங்கப்படும்.

**கனோலா உற்பத்தியாளர்களுக்கு ஆதரவு:**

2025 மற்றும் 2026 ஆண்டுகளில் முன்பணம்கடன்வரம்பு500,000டொலர்களாக உயர்த்தப்படும்.

மூலோபாய பதிலளிப்பு நிதியமாக ஐந்து பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு சய்யும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

**வர்த்தக பல்துறை திட்டம்:**

2030க்குள் கனடாவின் வெளிநாட்டு ஏற்றுமதியை 50 வீதமாக உயர்த்தும் திட்டம்.

**வேலை இழந்த தொழிலாளர்களுக்கு ஆதரவு:**

வரிகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு புதிய உதவிகள்.

**உயிரி எரிபொருள் துறை:**

சுத்தமான எரிபொருள் விதிகளில் மாற்றங்கள் மற்றும் புதிய ஆதரவு.

கனடா அரசு, வரிகளால் ஏற்பட்ட பாதிப்பை குறைத்து, பொருளாதார போட்டித்திறனை உயர்த்துவதே இந்த 9 அம்சத் திட்டத்தின் நோக்கம் என தெரிவித்துள்ளது.